கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், சுல்தான்பேட்டை ஊராட்சி ஒன்றியம்
அப்பநாயக்கன்பட்டி ஊராட்சி மன்ற தலைவரின் நடவடிக்கைகள்
முன்னிலை: திருமதி. சாந்தி ராஜேந்திரன்

மனைப்பிரிவு அங்கீகார எண்: 5/2023-2024 நாள்:28.12.2023

பொருள் : மனைப்பிரிவு அங்கீகாரம் - கோயம்புத்தூர் மாவட்டம் - சூலூர் வட்டம் - சுல்தான்பேட்டை ஊராட்சி ஒன்றியம் அப்பநாயக்கன்பட்டி ஊராட்சி மற்றும் கிராமம் - நில அளவு எண்: 183/1B - ல் 1.50 ஏக்கர் (60.73 ஹெக்டேர்) பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கு அங்கீகாரம் வழங்கி உத்தரவு பிறப்பித்தல் - தொடர்பாக.

பார்வை :
1. மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் கோயம்புத்தூர், கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலர்/ இணை இயக்குநர் இணையவழி விண்ணப்பம் எண்: CBE/LPA/TPH4U33J/2023/2023/TCP நாள் -16.12.2023
2. மனுதாரர்கள்: ஜெய பாலாஜி புரோமோட்டர்ஸ் பிரைவேட் லிமிடெட் விண்ணப்பம் 16-12-2023
3. சூலூர் சார்பதிவாளர் அலுவலக தானப்பத்திர எண்கள் : 18741/2023 மற்றும் 18742/2023
4. பலவகை ரசீது எண்: 13198 நாள்: 29-12-2023
5. அப்பநாயக்கன்பட்டி ஊராட்சி மன்றத் தீர்மான எண்: 377 நாள்: 18.12.2023

*****

உத்தரவு :

கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், சுல்தான்பேட்டை ஊராட்சி ஒன்றியம் அப்பநாயக்கன்பட்டி ஊராட்சி மற்றும் கிராமம் நில அளவு எண்: 183/1B - ல் 1.50 ஏக்கர் (60.73 ஹெக்டேர்) பரப்பில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு பார்வை -3 ல் காணும் சூலூர் சார்பதிவாளர் அலுவலக தானப்பத்திர எண் : 18741/2023 மற்றும் 18742/2023 - ன்படி ஊராட்சிக்கு சாலைகள், பொது உபயோகம் மற்றும் TANGEDCO இடங்களை பார்வை -2 ல் காணும் மனுதாரர்களால் உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து பார்வை - 1ல் காணும் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் கோயம்புத்தூர், கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலர்/இணைஇயக்குநர் அவர்களின் உத்தரவின்படி மனைப்பிரிவிற்கு இணையவழி விண்ணப்பம் எண்:CBE/LPA/TPH4U33J/2023/2023/TCP நாள்:16.12.2023 -ன்படி ம.வ/ (கோ.உ.தி.கு) எண்: 593/2023 -ன் படி தொழில்நுட்ப அனுமதியும் மற்றும் 688/2023-ன்படி திட்ட அனுமதியும் வழங்கி உத்தரவு பெறப்பட்டுள்ளதை தொடர்ந்து பார்வை -4 ல் காணும் ஊராட்சியின் பலவகை ரசீதின்படி அபிவிருத்தி கட்டணங்கள் மனுதாரர்களால் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் பார்வை - 5ல் காணும் இவ்வூராட்சி மன்றத் தீர்மான எண் : 377 நாள்: 18.12.2023 - ன்படி இறுதி அங்கீகாரம் வழங்கி அங்கீகரிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மேற்கண்ட தொழில் நுட்ப அனுமதியில்

கண்டுள்ள நிபந்தனைகளின்படியும் கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு மனைப்பிரிவிற்கு மனைப்பிரிவு அங்கீகார எண்:5/2023-2024 வழங்கி இதன் மூலம் உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

நிபந்தனைகள்:

1. குடிநீர் வசதி ஏற்படுத்த வேண்டும்.

2. தெருவிளக்கு வசதி ஏற்படுத்த வேண்டும்.

3. தார்சாலைவசதி ஏற்படுத்த வேண்டும்.

4. இத்துடன் இணைக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ளவாறு மனைப்பிரிவுகள் அடங்கிய 6' X 4' அளவில் நிரந்தர வரைபடம் ஒன்றினை பொதுமக்களுக்கு தெரியுமாறு மனைப்பிரிவு பகுதியில் நிறுவப்பட வேண்டும்.

தலைவர்
அப்பநாயக்கன்பட்டி ஊராட்சி

இணைப்பு :

1. உள்ளூர் திட்டக்குழும உத்தரவு மற்றும் நிபந்தனைகள்.
2. மனைப்பிரிவு வரைபடம்.
3. ஊராட்சி மன்ற தீர்மான நகல்.

பெறுநர்:

M/S ஜெய பாலாஜி புரோமோட்டர்ஸ் பிரைவேட் லிமிடெட்
9/27 PP ஸ்ரீ பாலாஜி ரெசிடென்சி திருவள்ளுவர் காலனி
மேற்கு பகுதி
மாக்கினாம்பட்டி
பொள்ளாச்சி,
கோயம்புத்தூர் மாவட்டம் - 642 003.

நகல்:

1. உயர் திரு. இணை இயக்குநர் / உறுப்பினர் செயலர் அவர்கள்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் கோயம்புத்தூர்,
கதவு எண்: 50, தரை மற்றும் முதல் தளம்,
பெட்ரோல் பங்க் சாலை, காந்திமாநகர், கணபதி,
கோயம்புத்தூர் - 641 004.

2. சார்பதிவாளர்,
சார்பதிவகம்,சூலூர் - 641 402.